## 60. எந்தன் பெலனே கர்த்தாவே

**பல்லவி**

எந்தன் பெலனே கர்த்தாவே
உம்மில் அன்பு கூர்ந்திடுவேன்

**அனுபல்லவி**

*என் கோட்டையும் நீர்*
*என் அடைக்கலம் நீர்*
*என் துருகமும் நீர்*
*என்னில் உயர்ந்தீர்*

**சரணங்கள்**

1. வெண்கல வில்லும் வலையும்படி
எந்தன் புயத்தை வலுவாக்கி
எந்தன் கரத்தை போருக்கும்
பயிற்சி கொடுக்கும் கர்த்தாவே
- என் கோட்டையும்

2. உம்மாலே சேனைக்குள் பாய்ந்திடுவேன்
உம்மாலே மதிலை தாண்டிடுவேன்
சத்துருவை தொடர்ந்து பிடித்து
நிர்முலமாகுவரை திரும்பேன்
- என் கோட்டையும்

3. ஆபத்து காலத்தில் கூப்பிடுவேன்
எனக்கு வந்து உதவிடுவீர்
நெருக்க நேரத்தில் அழைத்திடுவேன்
நெருங்கி வந்து விடுவிப்பீர்
- என் கோட்டையும்